# ‘மல்லிகைப் பூ ஏற்றுமதியில் நிலையான வருமானம் ஈட்டலாம்’

**மதுரை, ஆக. 13:** மல்லிகைப் பூ ஏற்றுமதியில் பெண்கள் வீட்டிலிருந்தபடியே நிலையான வருமானம் ஈட்டலாம் என்று, மதுரை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் சி. சின்னுசாமி கூறினார்.

தியாகராஜர் கல்லூரியின் மகளிரியல் மையம் சார்பில், மதுரை மல்லி என்ற தலைப்பில், சுயவேலைவாய்ப்பு பற்றிய பயிற்சிக் கருத்தரங்கம் புதன்கிழமை நடைபெற்றது.

இக் கருத்தரங்கைத் தொடங்கி வைத்து, மதுரை வேளாண் கல்லூரி முதல்வர் சி.சின்னுசாமி பேசியது: விவசாய நாடான இந்தியா, பல்வேறு வேளாண் விளைபொருள்கள் உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது. உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைந்துள்ள நமது நாடு, பூக்கள் உற்பத்தியிலும் முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கிறது. அதிலும், மதுரை மல்லி, சர்வதேச அளவில் நமக்கு பெருமையையும், வணிக வாய்ப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது.

பெண்கள் வீட்டிலிருந்தபடியே மல்லிகைப் பூ மாலை ஏற்றுமதி செய்யலாம். மல்லிகைப் பூ ஏற்றுமதியில் பெண்கள் நிலையான வருமானத்தைப் பெறமுடியும். சர்வதேச சந்தை வாய்ப்பைப் பெறுவதன் மூலம், நம் நாட்டில் கோடையில் மல்லிகைப் பூ விலை வீழ்ச்சி அடைவதால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை ஈடுகட்டிக் கொள்ள முடியும் என்றார்.

வேளாண் கல்லூரி உதவிப் பேராசிரியர் பி. பாக்கியத்து சலிகா: சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் மல்லிகைப் பூச்சரத்துக்கு நல்ல வரவேற்பு உள்ளது.

மேற்குறிப்பிட்ட நாடுகளின் வாடிக்கையாளர்கள் விரும்பும் வகையில், பூச்சரம் தொடுத்து, ஏற்றுமதி செய்வதற்கு பயிற்சி அளிப்பது அவசியமாக இருக்கிறது. மேலும், பூக்கள் பதப்படுத்துதல், பூ விளைச்சலை அதிகரிப்பதற்கும் பயிற்சி தேவைப்படுகிறது என்றார்.



தியாகராஜர் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில், பூ மாலைக் கட்டும் பயிற்சி பெறும் மகளிர் குழு உறுப்பினர்கள்.

இதில், மதுரையின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு மல்லிகைப் பூச்சரம், மாலை, ஜடை அலங்காரம் தொடுப்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

கல்லூரி முதல்வர் த. ராஜசேகர், மகளிரியல் ஆய்வு மைய இயக்குநர் எம். எயினி, பொருளாதாரத் துறைத் தலைவர் எஸ். கனகசபை, விலங்கியல் துறைப் பேராசிரியர் என். ஆசாதேவி உள்ளிட்டோர் பேசினர்.